**காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்**
**30.08.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்**
**தீர்மானம் நகல்கள்**

**பொருள் எண்:1**

**நகர்மன்ற தலைவரால் கொண்டு வரும் தீர்மானம்:**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தீவுத் தெருவில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்தப் பெண்கள் பள்ளி கல்வி துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த பள்ளியில் பயிலும் மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்தும் வகையில் பள்ளி கட்டிடத்தில் கூடுதல் வகுப்பறைகள் அமைக்கவும், பள்ளி கட்டிடத்தில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும் பள்ளி கட்டிடத்தினை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கும் மேலும் பள்ளியை சுகாதாரமான முறையில் வைப்பதற்கு தினசரி துப்புரவு பணிகள் நகராட்சி மூலம் மேற்கொள்வதற்கும் தீவுத் தெரு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியை காயல்பட்டினம் நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களை நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக்கொண்டு தீர்மானித்தல்.

**தீர்மானம் எண்.477**

- தீவுத் தெரு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியை காயல்பட்டினம் நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்வதற்கு உரிய அனுமதி வழங்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களை இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்:2**

தூய்மை இந்திய இயக்கம் 2.0- நீர் மேலாண்மை கூறுகளின் கீழ் செப்டிக் டேங்க்களில் சேகரிக்கப்படும் மனித மலம், சிறுநீர் மற்றும் பயன்படுத்திய நீரைக் காலி செய்வதற்கு தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்ட 2026 மக்கள் தொகையின் தேவையின் அடிப்படையில் நகர்புற உள்ளாட்சி அமைப்பு வாரியாக செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு 2022-2023-ம் ஆண்டிற்கான பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை கூறுகளின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள் மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 26.06.2023 அன்று நடைபெற்ற 5வது மாநில உயர் அதிகாரம் கொண்ட குழுவின் முன் வைக்கப்பட்டு குழுவின் விரிவான ஆலோசனைக்குப் பிறகு 300 கழிவு நீர்டேங்கர்கள் (Cesspool Tankers) (115 நகராட்சிகளுக்கும், 185 பேரூராட்சிகளுக்கும்) வாங்குவதற்கு ரூ.129.75 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் தொட்டிகளை காலி செய்வதற்காக நிதியளிக்கும் முறையில் 95 நகராட்சிகளுக்கு 115 கழிவுநீர் டேங்கர்கள் (Cesspool Tankers) வாங்குவதற்கும் ஒரு வாகனத்திற்கு ரூ. 43.25 இலட்சம் மத்திய அரசு மானியம் 50% மாநில அரசு மானியம் 33% மற்றும் நகராட்சி பங்கு 17% என்ற விகிதத்தில் 2022-2023 –ம் ஆண்டிற்கான தூய்மை இந்திய இயக்கம் SBM (U) 2.0-ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தூய்மை இந்திய இயக்கம் SBM (U) 2.0 திட்டத்தின் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்கு 6KL கொள்ளளவு கொண்ட கழிவுநீர் டேங்கர் ஒன்று வாங்குவதற்கு ரூ. 43.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. (மத்திய அரசு மானியம் 21.63 இலட்சம், மாநில அரசு மானியம் 14.27 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு 7.35 இலட்சம்) மேலும், கழிவுநீர் டேங்கர் (Cesspool Tanker) வாங்குவதற்கு கொடுக்கப்பட்ட வரன்முறை மற்றும் அரசு விதிமுறைகளின்படி தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி சட்டங்கள் (TT) மற்றும் விதிகள் 2000-ன்படி, வாகனங்கள் ஒப்பந்தப்புள்ளி முறைகளை பின்பற்றி வாங்குவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி பங்கு ரூ.7.35 இலட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1632/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.478</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- வருவாய் நிதியில் நகராட்சி பங்கு செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்படுகிறது
- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:3**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024-ம் நிதியாண்டிற்கு மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை துறை அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமாகிய திரு.அனிதா இராதாகிருஷ்ணன் அவர்கள் பரிந்துரை செய்துள்ள கீழ்காணும் அட்டவணை I-ல் காணும் பணிக்கு பதிலாக அட்டவணை II-ல் காணும் பணியினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்துள்ளதாக கூடுதல் ஆட்சியர் /(வ) /திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/6025/2022 நாள். 28.07.2023 –ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை I

| வ.எண் | பணியின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | காயல்பட்டினம் நகராட்சி, தைக்காவூர் வார்டு-11 பழைய தைக்கா துவக்கப்பள்ளியில் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல் | 15,00,000/- |

அட்டவணை II

| வ.எண் | பணியின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | காயல்பட்டினம் நகராட்சி, டிரைவர் காலனி மேற்குத் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 15,00,000/- |

மேற்காணும் அட்டவணை II-ல் கண்டுள்ள பணி 2023-24 ஆம் நிதியாண்டு திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் பொருட்டு உரிய நிர்வாக அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டு கூடுதல் ஆட்சியர் /(வ)/திட்ட இயக்குநர் , மாவட்ட ஊரக வளர்ச்சி தூத்துக்குடி அவர்களை கேட்டு கொண்டு கருத்துரு அனுப்பி வைக்கும் பொருட்டு நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. அட்டவணை I-ல் கண்டுள்ள பணிக்கு பதிலாக அட்டவணை II-ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 1266/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.479</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:4**

கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் ந.க.எண்.அ2/10143/2022 நாள்.29.04.2023 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண்.398 நாள்.31.05.2023-ன்படி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2022-23-ம் ஆண்டிற்கு காயல்பட்டினம் நகராட்சி, எல்.ஆர்.நகரில் நூலக கட்டிடம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/10143/2022, நாள்.05.07.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 28.07.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.006 % குறைவு |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.79 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 845/2023/ இ1)**

**<u>தீர்மானம் எண்.480</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:5**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/9566/2022, நாள்.27.06.2023-ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி ஓடக்கரை, நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு பெஞ்ச், டெஸ்க் வழங்கும் பணிக்குரிய மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 28.07.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>3.43 % அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 846/2023/ இ1)**

**<u>தீர்மானம் எண்.481</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:6**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/9566/2022, நாள்.27.06.2023-ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி, தைக்கா தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு பெஞ்ச், டெஸ்க் வழங்கும் பணிக்குரிய மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 28.07.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>3.43 % அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 846/2023/ இ1)**

**<u>தீர்மானம் எண்.482</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:7**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/9566/2022, நாள்.27.06.2023-ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி, அலியார் தெரு, நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு பெஞ்ச், டெஸ்க் வழங்கும் பணிக்குரிய மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 28.07.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>3.43 % அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.846/2023/ இ1)**

**தீர்மானம் எண்.483**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:8**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண். 34 (7) -ன்படி, புதிய நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கும் பணிக்கு வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் சுற்றுச்சூழல் மாசு மற்றும் பொது சுகாதார நலன் கருதியும், வார்டு எண். 7, சிவன் கோவில் தெருவில், ஏற்கனவே மயான பயன்பாட்டில் உள்ள சர்வே எண். 392/5 -ல் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு முன் மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது அதனை தொடர்ந்து, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2023-24-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.392/5-ல் புதிதாக நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 10988/2023/P1 நாள். 28.04.2023-ன்படி, பரிந்துரைக்கப்பட்டு, மேற்காணும் திட்டம் செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் லிமிடெட் (SQM/TUFIDCO) சென்னை நிறுவனத்தால் மதிப்பீடு சரிபார்க்கப்பட்டு ரூ.188.00 இலட்சத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை (Appraisal Report) வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, காயல்பட்டினம் நகராட்சி வார்டு எண். 7 சிவன் கோவில் தெருவில் சர்வே எண். 392/5-ல் தற்சமயம் மயான பயன்பாட்டில் உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2023-24 –ன் கீழ் புதிதாக நவீன எரிவாயு தகனமேடை ரூ. 188.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணி மேற்கொள்ள அரசாணை (4D) எண்.26 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.07.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்காணும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/P1 நாள்.01.08.2023–ன்படி, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி சுற்றுச்சூழல் மாசு மற்றும் பொது சுகாதார நலன் கருதி ரூ.188.00 இலட்சத்திற்குரிய திட்ட மதிப்பீட்டினை அங்கீகரிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 481/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.484</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- ரூ.188.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளது அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:9**

காயல்பட்டினம் நகராட்சி 2023-2024 ஆம் ஆண்டிற்கு குடிநீர் வடிகால் நிதியின் கீழ், புதிய குடிநீர் பகிர்மான குழாய்களிலிருந்து 200 எண்ணம் வீடுகளுக்கு குடிநீர் குழாய்கள் இணைக்கும் பணியை மேற்கொள்வதற்கு, 01.06.2023 அன்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய்களிலிருந்து 200 எண்ணம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு ரூ.7.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 28.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s.ஸ்ரீவிநாயகமுருகன் கன்ஸ்ட்ரக்சன்<br>14A, நமசிவாயம் பிள்ளை தெரு,<br>T.கல்லுப்பட்டி-625702 | மதிப்பீடு ரேட்டை விட 0.13% குறைவு |
| 2. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204 | மதிப்பீடு ரேட்டை விட 0.30 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் M/s.ஸ்ரீவிநாயகமுருகன் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,T.கல்லுப்பட்டி என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.928/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.485</u>**

- அங்கீகரிக்கப்படுகிறது.
- உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:10**

மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் 18.04.2023 அன்று சட்டமன்றத்தில் "அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குட்பட்ட நகர்புற துணை சுகாதார பகுதியில் செவிலியர்கள் தடுப்பூசி உள்ளிட்ட மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்திட்ட பணிகளை சிறப்பாக செயல்படுத்த ஒரு தனி கட்டமைப்பு அவசியப்படுகிறது என்பதை கருத்தில் கொண்டு புதிய நகர்புற துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு வெளியிட்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து பணி இயக்குநர் தேசிய சுகாதார பணி- தமிழ்நாடு ஆணையாளர் தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1869/NUHM /SHS /2015 நாள். 03.08.2023-ல், காயல்பட்டினம் நகராட்சி கோமான் நடுத்தெருவில் 2023-2024-ம் ஆண்டிற்கான புதிய நகர்புற துணை சுகாதார நிலையம் (Urban Health Sub-Centre) ரூ.30.00 இலட்சத்தில் கட்டிடம் கட்டுவதற்கான வடிவமைப்பு வகை (Type Design for Construction) மற்றும் பொது வழிமுறைகள் இணைத்து வரப்பெற்றுள்ளது.

மேற்காணும், கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, காயல்பட்டினம் நகராட்சி கோமான் நடுத்தெருவில் புதிதாக நகர்புற துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு ரூ. 32.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. ரூ.32.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. கூடுதல் செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1548/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.486</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- ரூ.32.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- கூடுதல் செலவீனங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:11**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.20388/2022/எச்.1 நாள்.09.12.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 11.08.2023 தேதிய காணொளி ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி பகுதிகளில் கணகெடுப்பு செய்யப்பட்ட தெரு நாய்களுக்கு முறையாக கருத்தடை அறுவை சிகிச்சை செய்திடவும், அதற்கான முறையான கட்டமைப்புகளை ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, 11.08.2023-ம் தேதிய இந்நகராட்சி ஆணையாளரின் குறிப்பின்படி, இந்நகராட்சி துப்புரவு ஆய்வளருடன் இடம் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி சொந்தமான கடையக்குடி உரக்கிடங்கில் கணக்கெடுப்பு செய்யப்பட்ட தெருநாய்களுக்கு முறையாக கருத்தடை அறுவை சிகிச்சை செய்திடும் பொருட்டு கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ.25.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. திட்ட நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இச்செலவீனத்தை ஈடு செய்யலாம்.
4. உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1625/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.487</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:12**

15வது மத்திய நிதிக்குழு மானியம் (Untied Grant) 2023-2024 –ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1421.90 மீட்டர் நீளம் சாலைகள் ரூ. 76.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16496/2023/CFC-1 நாள்.23.06.2023–ல் அனுமதிக்கப்பட்டதற்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை ந.கஎ.எண். 2542/2023/ஆ1 நாள். 30.06.2023-ன்படி, நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 2542/2023/ஆ1 நாள். 03.07.2023-ன்படி, தொழில்நுட்ப அனுமதி பெற்று மேற்காணும் மதிப்பீட்டிற்கான பணிக்கு 14.07.2023-ந் தேதி இரண்டு உறையிலான மின்னனு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள அறிவிப்பினை இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை வெளியீட்டு ஆணை எண்.3478/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்2023 நாள்.06.07.2023-ந் தேதிய பரிந்துரையின்படி, மாநில அளவில் 07.07.2023 அன்று ஒரு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் (All Editions in the State) விளம்பரம் செய்த வகைக்கு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் விளம்பரக் கட்டணம் (வரிகள் உட்பட) ரூ.22,730/-க்குரிய பட்டியல் எண்.AAA/0166/23-24 நாள்.09.07.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 31.07.2023-ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விவரப்படியான விளம்பரக் கட்டணம் ரூ.22,730/-ஐ சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. விளம்பர கட்டணம் ரூ.22,730/-ஐ வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( கோப்பு எண்.1042-1/2023/இ1 )**

**தீர்மானம் எண்.488**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:13**

6வது மாநில நிதிக்குழு மானியம் - 2023-2024 (SFC Arrear Fund) மற்றும் பொது நிதி (General Fund) -2023-2024 –ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.220385/2023/SS-2 நாள்.28.06.2023 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.36965/2022/எம்1 நாள்.23.06.2023 அனுமதிக்கப்பட்டதற்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை ந.கஎ.எண். 2626/2023/ஆ1 நாள். 30.06.2023 மற்றும் ந.கஎ.எண். 26/2021/ஆ1 நாள். 30.06.2023-ன்படி, நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 2626/2023/ஆ1 நாள். 03.07.2023 மற்றும் ந.க.எண்.26/2021/ஆ1 நாள். 03.07.2023-ன்படி, தொழில்நுட்ப அனுமதி பெற்று கீழ்காணும் பணிக்களுக்கு 12.07.2023-ந் தேதி இரண்டு உறையிலான மின்னனு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது

| வ.எண் | திட்டம் | பணியின் மதிப்பு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | 6வது மாநில நிதிக்குழு மானியம் - 2023-2024 | சிப்பம் 1- ரூ. 63.00<br>சிப்பம் 2- ரூ. 84.00 |
| 2. | பொது நிதி -2023-2024 | சிப்பம் 1- ரூ. 77.16<br>சிப்பம் 2- ரூ. 95.00 |

மேற்காணும் விபரப்படியான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை வெளியீட்டு ஆணை எண்.3477/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்2023 நாள்.06.07.2023-ந் தேதிய பரிந்துரையின்படி, மாநில அளவில் 07.07.2023 அன்று ஒரு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் (All Editions in the State) விளம்பரம் செய்த வகைக்கு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் விளம்பரக் கட்டணம் (வரிகள் உட்பட) ரூ.51,206/-க்குரிய பட்டியல் எண்.AAA/0165/23-24 நாள்.09.07.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 31.07.2023-ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விவரப்படியான விளம்பரக் கட்டணம் ரூ.51,206/-ஐ சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. விளம்பர கட்டணம் ரூ.51,206/-ஐ வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( கோப்பு எண்.1042-2,3/2023/இ1 )**

**தீர்மானம் எண்.489**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:14**

காயல்பட்டினம் நகராட்சி TN69U9148 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பணியின் அவசர அவசியம் மற்றும் பாதுகாப்பை கருதில் கொண்டு உடனடியாக பழுது நீக்க பணிகள் செய்வதற்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய செலவீனம் ரூ.16,635/-ஐ இவ்வலுவலக (மா.ப) ஈப்பு ஓட்டுநர் திரு. ப.சிதம்பரம் என்பவரால் கீழ்காணும் விபரப்படி, செலவு செய்யப்பட்டுள்ளதை தனக்கு வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி<br>பட்டியல் எண். 202 நாள். 27.05.2023 | ரூ 6,644/- |
| 2. | நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி<br>பட்டியல் எண். 16 நாள். 17.06.2023 | ரூ. 9,991/- |
| மொத்தம் | | ரூ. 16,635/- |

இந்நகராட்சி ஈப்பு வாகனத்தில் ஏற்படுள்ள பழுதுகளை நீக்கம் செய்த கொடுத்த வகைக்கு பட்டியல் ரூ.16,635/-ஐ இவ்வலுவலக (மா.ப) ஈப்பு ஓட்டுநர் திரு. ப.சிதம்பரம் என்பவருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்த வகைக்கு ரூ.16,635/-ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.556/2022/இ1)**

**<u>தீர்மானம் எண்.490</u>**

- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:15**

காயல்பட்டினம் நகராட்சி TN92A6369 ஈப்பு வாகனத்தில் பயன்பாட்டில் இருந்த மின்கலன் (Battery) தன்மையிழந்து வாகனம் இயக்க முடியாத நிலை ஏற்பட்டதால் பணியின் அவசர அவசியத்தை கருதில் கொண்டு புதிய மின்கலன் (Battery) உடனடியாக பொருத்துவதற்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய செலவீனம் ரூ.7,200/-ஐ திருச்செந்தூர் சரவணா மோட்டார் ஒர்க்ஸ் உரிமையாளர் திரு.G.ஆறுமுகம் என்பவருக்கு கீழ்காணும் விபரப்படி, பட்டியல் வழங்கவேண்டியுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | சரவணா மோட்டார் ஒர்க்ஸ், திருச்செந்தூர்<br>பட்டியல் எண். 208 நாள். 17.08.2023<br>Exide 70.A .H Battery<br>A34 FAO 184499 | ரூ.8,200/- |
| | **கழிக்க:** பழைய மின்கலம் (Old Battery) கிரையம் | ரூ. 1,000/- |
| | நிகர பட்டியல் தொகை | ரூ. 7,200/- |

இந்நகராட்சி ஈப்பு வாகனத்தில் புதிய மின்கலன் (Battery) பொருத்தி கொடுத்த வகைக்கு பழைய மின்கலன் (Battery) விலை கிரையம் கழித்து பட்டியல் ரூ.7,200/- மட்டும் திருச்செந்தூர் சரவணா மோட்டார் ஒர்க்ஸ் உரிமையாளர் திரு.G.ஆறுமுகம் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஈப்பு வாகனத்தில் புதிய மின்கலன் (Battery) பொருத்திய வகைக்கு ரூ. 7,200/-ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.491</u>**

- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:16**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதிகள்2016 னை சிறப்பாக செயல்படுத்திடும் வகையில் கடையக்குடியில் உள்ள வளமீட்பு பூங்காவில் உள்ள Plastic Bailing machine பழுதானதால் பிளாஸ்டிக் கழிவுகள் தேக்கம் ஏற்பட்டுள்ளதால், அதனை சரி செய்திட நகர்மன்ற தலைவர் அவர்களின் 21.07.2023ம் தேதிய முன் அனுமதியினை வைத்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Eco Environs Solutions, Erode என்ற நிறுவனம் மூலம் பழுது பார்க்கும் பணி செய்யப்பட்டு, தற்போது அதற்கான செலவு பட்டியல் தொகை ரூ.78,630/-க்கு மேற்படி நிறுவனத்தில் இருந்த பெறப்பட்டுள்ளது. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 549/2023/எச்.1)**

**<u>தீர்மானம் எண்.492</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:17**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகதார பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகக்காக பயன்படுத்தப்படும் புகை அடிக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், தற்போது வர இருக்கின்ற மழைக் காலத்தினை முன்னிட்டு இந்த இயந்திரங்களின் பயன்பாடு அதிகமாக இருப்பதாலும், அதனை விரைந்த பழுது பார்த்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காகவும், இதற்காக ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 30,000/-ஐ பொது நிதியில் இருந்து பயன்படுத்திக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**- அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 802/2022/எச்.1)**

**<u>தீர்மானம் எண்.493</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:18**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் ரூ.80.00 கோடி மதிப்பிலான மக்கள்நலத்திட்டப்பணிகள் துவக்க விழாவானது மாண்புமிகு. திருமதி.கனிமொழி, பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் மாண்புமிகு. திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புதுறை அமைச்சர் அவர்கள் ஆகியோர்களால் நடைபெற்றது. இதற்காக நகரின் பல இடங்களில் விளம்பர பதாகைகள் நகர்மன்ற தலைவர் அவர்களின் 21.07.2023ம் தேதிய முன் அனுமதியின்படி நகராட்சி சார்பாக நிறுவப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ.24,800/-னை இதனை செலவு செய்த இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு.சி.நிஜந்தன் என்பவருக்கு இந்நகராட்சி பொத நிதியில் இருந்த வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** – 1. அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கலாம்.

2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1447/2023/எப்.1)**

**<u>தீர்மானம் எண்.494</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:19**

இந்நகராட்சி அலுவலக பொது பிரிவு மற்றும் வருவாய் பிரிவில் பயன்பாட்டில் இருந்து வரும் கணினிகள் வாங்கப்பட்டு நீண்டகாலமாகிவிட்டதால் தற்போது கணினிகளின் இயங்கும் தன்மை குறைவாக உள்ளது. இதனால் உடனுக்குடன் பணிகள் செய்து முடிக்க இயலாத நிலை ஏற்பட்டு வருகிறது. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலக பொது பிரிவு மற்றும் வருவாய் பிரிவில் இயக்கப்படும் 6 எண்ணம் கணினிகள் விரைந்து செயல்படுத்தும் வகையில் SSD HDD 512 GB & SSD 256 SSD பொருத்தி கணினிகளை சர்வீஸ் (Service) செய்ய வேண்டியுள்ளது. இதற்குரிய உத்தேச செலவீனம் ரூ. 22,500/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள அங்கீரிக்கலாம்.
- நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.495</u>**

- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:20**

காயல்பட்டினம் நகராட்சி பொது பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் வருவாய் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பெரும்பாலான பணியிடங்களும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு வரும் நிலையில் இந்நகராட்சி அலுவலகத்தில் பிரிவு அலுவலகர்கள் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து பணி செய்யும் நாற்காலிகள் அனைத்தும் வயர்கள் சேதமடைந்த நிலையில் உள்ளதால் அமர்ந்து பணி செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. இந்த நாற்காலிகள் முந்தைய மூன்றாம் நிலை நகராட்சி காலத்தில் வாங்கப்பட்டதாகும். பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலகத்தில் பழுதடைந்த நிலையில் இருக்கும் 24 எண்ணம் நாற்காலிகளை பழுது நீக்கம் செய்யவேண்டியது அவசியம் என்பதால் நிர்வாக நலனை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் பழுதடைந்துள்ள 24 எண்ணம் நாற்காலிகளை பழுது நீக்கம் பணிகள் செய்தற்குரிய செலவீனம் ரூ. 22,800/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிந்து செலவீனங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம்அங்கீரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.496</u>**

- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:21**

காயல்பட்டினம் நகராட்சி தீர்மான எண்.374 நாள். 31.05.2023-ன்படி இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிய கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கப்பட்டுள்ளது. அதில் புதிதாக வாங்கப்பட்ட Canon All in One Printer MF244DW (Print,Scan,Copy) இரண்டையும் வருங்காலங்களில் பயன்படுத்தும் வகையில் அதற்குரிய டோனர்கள் வாங்குவதற்குரிய உத்தேச செலவீனம் ரூ.50,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள அங்கீரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.497</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:22**

காயல்பட்டினம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு 57(7)-ன் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குரிய செலவினங்கள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.498</u>**

- பிரிவு 57(7) பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:23**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் ஜூலை - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | **இனங்கள்** | **நிலுவை & நடப்பு கேட்பு ரூ.** (**இலட்சத்தில்**) | **நிலுவை &நடப்பு** வசூல் ரூ. **(**இலட்சத்தில்**)** | **நிலுவை &நடப்பு** நிலுவை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 190.25 | 78.87 | 111.38 |
| 2 | காலிமனை வரி | 19.36 | 9.60 | 9.76 |
| 3 | **குடிநீர் கட்டணம்** | 88.48 | 23.75 | 64.73 |
| 4 | **வரியற்ற இனம்** | 0.43 | 0 | 0.43 |
| 5 | தொழில்வரி | 17.63 | 0.66 | 16.97 |
| 6 | SUC Charges | 18.28 | 5.72 | 12.56 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.499</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:24**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் ஜூலை - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 89.13 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 29.47 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 2.89 |

| | | | |
|---|---|---|---|
| 160 | மானியங்கள் | 1-6 | 301.22 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | **I-7** | 0.02 |
| 180 | இதர வருமானம் | **I-9** | 7.11 |
| **மொத்தம்** | | | **429.84** |
| **செலவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | **I-10** | 142.43 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | **I-11** | 20.87 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | **I-12** | 213.27 |
| **260** | நகராட்சி பங்குத்தொகை | **1-15** | **10.21** |
| **மொத்தம்** | | | **386.78** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **43.06** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.500**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**